# பூமி நாச்சியார்

பொறுமை!
நம் எல்லோருக்கும் இருக்க வேண்டிய நல்ல குணங்களுள் ஒன்று. அப்போதுதான் இல்லறம் நல்லறமாகத் திகழும்.

"பொறுமையென்னும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்" என்று ஒரு பாடலே உள்ளது. "பொறுத்தார் பூமியாள்வார்" என்பது முதுமொழி. அதனையே வள்ளுவரும் தம் குறளில்
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
என்கிறார்.

தனக்கே குழி பறிப்போரையும் தாங்குகின்ற பூமியைப்போல தன்னை இகழ்ந்து பேசுபவர்களையும் பொறுத்துக் கொள்வதே மிகச் சிறந்த ஒன்றாகும் என்கிறார்.

ஒரு பெண் மிகப் பொறுமைசாலியாக இருப்பாளாயின் அவளை பூமி தேவிக்குச் சமம் என்பர்.

நம் போன்ற பாபிகளையும் தாங்கி நிற்கும் அந்த பூமித்தாயின் பொறுமையை என்னென்பது!

'நாச்சியார்' என்றால் தாய் என்று பொருள்பட ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமி நாச்சியார் என்று கொண்டாடும் இந்த பூதேவியின் பெருமையை ஸ்வாமி தேசிகன் தம்முடைய பூஸ்துதி என்ற 33 ஸ்லோகங்கள் மூலமாக அழகாகத் தெரிவிக்கிறார். அதில் ஒரு ஸ்லோகத்தில்,

ஸங்கல்ப கல்பலதிகாம வதிம் க்ஷமாயா:
ஸ்வேச்சா வராஹ மஹிஷீம்ஸீலபாநுகம்பாம்
விஸ்வஸ்ய மாதர மகிஞ்சந காமதேநும்
விஸ்வம் பராமஸரண: ஸரணம் ப்ரபத்யே

“எண்ணியவற்றையெல்லாம் தருகின்ற கற்பகக் கொடியாகவும், பொறுமை என்னும் குணத்தின் எல்லையிலே நிற்கின்றவளாகவும், வராஹ மூர்த்தியாக எம்பெருமான் அவதரித்தபோது அவர் மனம் கவர்ந்த தேவியாகவும், கதியற்றவர்களுக்குக் காமதேனுவாகவும், உலகை ஈன்ற தாயாகவும், எளிதில் அருளுபவளாகவும் உள்ள பூமிப்பிராட்டியை போக்கற்ற நான் புகலாகப் பற்றுகிறேன்” என்று பாடுகிறார்.

மேலும் ஒரு ஸ்லோகத்தில், “மந்திரங்களை எல்லாம் விவரிக்கும் பெருமையுடைய ப்ரணவமாக எம்பெருமான் இருக்க, அடுத்து வரும் பூ : என்ற முதல் வ்யாஹ்ருதியாக நீயே ஆகிறாய்” என்கிறார்.

அது மட்டுமா! உலகத்தை தாங்குபவன் என்பதனால் பெருமாளுக்கு ‘விஸ்வாம்பரன்’ என்ற பெயருண்டு. அதுபோல உலகைத் தாங்குபவளான உனக்கு ‘விஸ்வம்பரை’ என்ற பெயர் பொருந்தும் என்று கூறியவர் அந்த பூதேவியை வேறு சில பெயர்களாலும் துதிக்கிறார். அவை ஸர்வம் ஸஹா -- தம்மை அகழ்வாரையும் தாங்குபவள்; அவநி -- அன்னம் தண்ணீர் அளித்து எல்லாரையும் காப்பவள்; அசலா -- புடைபெயராமல் நிலைத்து நிற்பவள்; விஸ்வம்பரா -- கோடி கோடி ஜீவராசிகளைத் தாங்குபவள்; விபுலா --எல்லை யற்று விரிந்து பரந்து நிற்பவள்; வஸுந்தரா -- செல்வம் கொழித்திட இருப்பவள்.

சம்சார சாகரம் என்ற கடலில் மூழ்காதிருக்க நம்போன்றவர்களைக் காக்கும் அந்த தேவி ஒரு சமயம் ஹிரண்யாட்சன் என்ற அசுரனின் கொடுமை தாங்காமல் ஆழ்கடலுள் சென்று ஒளிந்து கொண்டாள். எங்ஙனம் சிருஷ்டி நடக்கும்? பிரம்மன் திகைத்தான்!

எம்பெருமானிடம் சென்று முறையிட்டான். அவரும் வராஹ அவதாரம் எடுத்து ஆழ்கடலுள் சென்று பூமிபிராட்டியைத் தேடினார். அடிமட்டத்தில் பயந்து, நடுங்கி ஒடுங்கி இருந்த தேவியைக் கண்டார். அவள் அழகில் மயங்கினார். அப்போது அங்கு நடந்த அவர்கள் திருமணத்திற்கு அவர் காலடியில் கொந்தளிக்கும் கடல் ஒலியே மங்கள வாத்திய இசையாயின என்று கீழ்வரும் ஸ்லோகத்தில் ஸ்வாமி தேசிகன் வருணிக்கிறார்.

பூர்வம் வராஹ வபுஷா புருஷோத்தமேந
ப்ரீதேந போகி ஸதநே ஸமுதீக்ஷிதாயா
பாதாஹதா: ப்ரளய வாரிதயஸ்தவாஸந்
உத்வாஹ மங்கள விதேருசிதா ம்ருதங்கா:

பிறகு தன் இரு கோரைப் பற்களுக்கிடையே தேவியைத் தாங்கிக் கொண்டு எம்பெருமான் வெளியே வரும்போது அவருடன் கடும் சண்டையிட்ட ஹிரண்யாட்சனைக் கொன்று பூமி நாச்சியாரை மீண்டும் கொணர்ந்ததை திருமழிசையாழ்வார் தம் நான்முகன் திருவந்தாதியில்

தானொருவனாகித் தரணியிடந்தெடுத்து
ஏனொருவ னெயிற்றில் தாங்கியதும் - யானொருவன்
இன்றா வறிகின்றே னல்லேன் இருநிலத்தைச்
சென்றாங் கடிப்படுத்த சேய்.

என்று பாட, திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில்

ஏனத்தினுருவாகி நிலமங்கை யெழில் கொண்டான்
வணத்திலவர் முறையால் மகிழ்ந்தேத்தி

என்று பாடுகிறார்.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட அந்த பூமி பிராட்டி துவாபர யுகத்தில் ஸத்ராஜித் என்பவரின் மகள் சத்யபாமையாகப் பிறந்து ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்த எம்பெருமானைத் திருமணம் செய்து கொண்டாள். எம் பெருமானும் பிள்ளை, பேரர்களுடன் மகிழ்ச்சியாக இருந்த ஒரு நாள் தேவேந்திரன் கண்ணனிடம் வந்து நரகாசுரனால் தேவர்களும், மானிடர்களும் மற்றவர்களும் படும் துன்பத்தைச் சொல்லிக் கதற, கண்ணன் நரகாசுரனைக் கொல்லத் தீர்மானித்து கருடன் மீதேறி உடன் சத்யபாமையையும் அழைத்துக்கொண்டு கிளம்பினார். நரகாசுரனின் பட்டினமான ப்ராக்ஜ்யோதிஷ புரத்தை நோக்கிக் கிளம்பினார்.

நரகாசுரனைக் கொல்லச் செல்லும்போது சத்யபாமை எதற்கு அவருடன்? போர் புரியச் செல்லுமிடத்தில் பத்னிக்கு என்ன வேலை?

முன்பு நடந்ததை நினைவிற்குக் கொண்டு வருவோம்.

எம்பெருமான் வராஹரூபியாக அவதரித்து பூமிதேவியைப் ப்ரளய ஸமுத்திரத்திலிருந்து தன் கோரைப் பற்களின் இடையே தாங்கி வெளிக் கொணர்ந்தார், அப்போது அவர் சம்பந்தத்தினால் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். அவன்தான் இந்த நரகாசுரன், பகவானுக்கும், பூமி நாச்சியாருக்கும் பிறந்தவனானாலும் கால பலத்தால் அசுர சுபாவம் உள்ளவனாக ஆனான், இவனால் உலகிற்கு உண்டாகப் போகும் உபத்ரவத்தை முன்பே அறிந்திருந்த எம்பெருமான் தேவியை நோக்கி, "பிராட்டியே! உன் புதல்வனான இவனை நான் ஒரு நாள் கொல்ல வேண்டி வரும். அப்போது உன் சம்மதத்துடனேயே உன் எதிரிலேயே கொல்ல வேண்டி வரும் " என்று கூறியிருந்தார்.அந்த வார்த்தையை நிறை வேற்றவே இப்போது சத்யபாமையையும் தன்னுடன் போருக்கு அழைத்துக் கொண்டு சென்றார்.

ப்ராக்ஜ்யோதிஷபுரத்தை ஒருவரும் நெருங்க முடியாமல் சுற்றிலும் நூறு காத அளவிற்கு பாசக் கயிறுகளை பரப்பி அவற்றின் மேற்புரம் சிறு சிறு கத்திகளைப் பதித்திருந்தான் அந்த நரகாசுரன். நெருங்குபவர்களைத் துண்டித்துவிடும் அந்தக் கத்திகளை க்ருஷ்ண பரமாத்மா சக்ராயுதத்தால் அறுத்துத் தள்ளினார். இதனைக் கண்டு எதிர்த்து வந்த முரன் என்ற ராக்ஷஸனையும் எம்பெருமான் கொன்றார். பிறகு முரனின் ஏழாயிரம் பிள்ளைகளையும் கண்ணன் கொன்றதைக் கண்ட நரகாசுரன் பல பாணங்களால் எம்பெருமானைத் தாக்க முற்பட்டான். உடனே கண்ணன் சக்ராயுதத்தால் அந்த நரகாசுரனை இரு துண்டாகப் பிளந்து வீழ்த்திக் கொன்றார்.

தன் கண் முன்பே தன் மகனை வெட்டிக் கொன்றதையும் கண்டு சத்யபாமை பொறுமையுடன் இறந்து கிடந்த தன் மகன் அபகரித்து வைத்திருந்த அதிதியின் குண்டலங்களைக் கைப்பற்றி அவற்றைக் கண்ணனிடம் கொடுத்தவாறே, "ப்ரபோ! அன்று என்னை வராஹ மூர்த்தி யாக அவதரித்துக் காத்தபோது நமக்குப் பிறந்தவன் தான் இந்த நரகாசுரன் 'பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாயச துஷ்க்ருதாம்' என்று நீங்கள் கீதையில் கூறியபடி இன்று நல்லவர்களைக் காக்க இந்தக் கொடியவனைக் கொன்றீர்கள், ஆனால் இவன் சந்ததியைக் காப்பாற்றவேண்டும் " என்று வேண்டிக் கொண்டதாக ஸ்ரீபத்ம புராணம் கூறுகிறது. அந்த நன்னாளே தீபாவளி!

இந்தக் கலியுகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற க்ஷேத்ரத்தில் விஷ்ணுசித்தர் என்ற வைணவ அடியார் ஒருவர் தினமும் தம் நந்தவனத்தில் பூக்கும் மலர்களைப் பறித்து தாமே மாலையாகக் கட்டி எம்பெருமானுக்குச் சாத்தி மகிழ்ந்து வந்தார். ஒரு நாள் - அது நள வருஷம் ஆடி மாதம் பூர நக்ஷத்திரம் செவ்வாய்க் கிழமை வழக்கம்போல விஷ்ணுசித்தர் தம் நந்தவனத்தில் திருத் துழாய்ச் செடிகளைச் சுற்றியிருந்த களைகளைக் கொத்தியபோது, பூமியில் அந்தபூமிப்பிராட்டியின் அம்சமாகத் தோன்றிய ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்தார். அந்தக் குழந்தைக்கு 'கோதை' என்று பெயர் சூட்டி சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார். பெண் வளர்ந்தாள். பருவ வயதை அடைந்தாள். இருப் பினும் அவள் சிறு வயது முதலே தன் தந்தை எம்பெரு மானுக்குக் கட்டி வைக்கும் மாலைகளைத் தந்தைக்குத் தெரியாமல் தான் அணிந்து அழகு பார்ப்பது வழக்கம். பருவ வயதையடைந்ததும் அந்த வழக்கத்தை அவள் கைவிடவில்லை. ஒருநாள் அவள் அதுபோல் மாலைகளைச்சூடி அழகு பார்க்கும்போது தந்தை விஷ்ணுசித்தர் பார்த்துவிட்டார்.

பெண்ணைக் கடிந்துகொண்டவர் எம்பெருமானுக்கு அன்று மாலைகளைச் சாற்றவில்லை. மன வருத்தத்துடன் உண்ணாது உறங்கினார்.கனவில் எம்பெருமான் தோன்றி "இன்று ஏன்மாலை சாற்ற வில்லை "என்று கேட்க, விஷ்ணுசித்தர் நடந்தவற்றைக்கூற எம்பெருமான் அந்த மாலைகளையே அவள் சூடிக் கொடுத்த மாலைகளையே தாம் தினம் விரும்பி ஏற்பதாகக் கூறி மறைந்தார்.

கோதை அந்த அரங்கனின் மீது கொண்ட காதல் வளர்ந்தது. தந்தை தனக்குத் திருமணம் செய்ய நினைத்தபோது "மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மனிதர்களை மணக்க இசையாது அந்த எம்பெருமானையே மணப்பேன் என்று கூற இது எங்ஙனம் சாத்தியமாகுமென்று தந்தை கவலையிலாழ்ந்தார்.

மீண்டும் எம்பெருமான் கனவில் தோன்றி “உம் மகளைப் பற்றிய கவலையை விடும். அவள் பூமி நாச்சியாரின் அவதாரம். எனக்காகப் பிறந்தவள்.அவளை நாளை மணக்கோலத்துடன் என் சந்நிதிக்கு அழைத்து வாரும்” என்று கூறி எம்பெருமான் மறைய ஆழ்வாரும் தம் பெண்ணை மணமகள் கோலத்துடன் கோயிலுக்கு அழைத்துச்செல்ல, அங்கு கூடியிருந்த ஸ்ரீவல்லப மன்னன் மற்றும் மக்கள் முன்பு அந்தக் கோதை என்ற இளம் பெண் அழகிய மணவாளன் சந்நிதியினுள் சென்றவள் அந்த ஜோதியுடன் தானும் கலந்து விட்டாள். “விஷ்ணுசித்தரே! இன்று உம் மகள் கோதையை எமக்கு மணம் முடித்துக் கொடுத்ததால் நீர் எமக்கு மாமனாராகி விட்டீர்” என்று அசரீரி வாக்கு கேட்டது. விஷ்ணுசித்தர் ஆழ்வார்களிலெல்லாம் பெரிய ஆழ்வாராக ஆனார். அவர் மகள் பூதேவி நாச்சியாரின் அம்சமான கோதையும், கோதை நாச்சியாராய் ஆனாள். அதனாலேயே ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலில் பெருமாளுக்குப் பக்கலில் அவர் மாமனாரான பெரியாழ்வார் சிலையையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்’